நடத்தப்படுகின்றன. அவசியமிருந்தால், மூன்றாவது கூட்டமும் துறையினுடைய இயக்குநரால் நடத்தப்படலாம். ஆக, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அங்கே இருக்கக்கூடிய மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு, அரசின் விதிமுறைக்குட்பட்டு பரிந்துரை செய்யப்பட்டால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, கண்டிப்பாக செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தருமபுரி மாவட்டத்திலே பெண்ணாகரம் மற்றும் மொரப்பூர் ஊராட்சிகளைப் பிரித்து, புதியதாக ஏரியூர் மற்றும் கடத்தூர் ஆகிய இரண்டு புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்க 9-12-2013-ல் ஆணை வெளியிட்டார்கள். அதேபோல கடலூர் மாவட்டத்தில், ஸ்ரீமுஷ்ணம் என்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தைத் தோற்றுவித்திட அரசாணை எண் 97, நாள் 5-8-2014-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வெளியிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அவசியம் ஏற்படின், அதிகாரிகளுடன் ஆய்வு செய்து கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

113—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***3218—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகரில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2016 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகரில் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னித் தமிழ் பூமி காக்கும் எங்கள் அன்னைத் தமிழே, சென்னை உயர் நீதிமன்றம், தமிழ்நாடு உயர் நீதிமன்றம் என (மேசையைத் தட்டும் ஒலி) அமுதினிய தமிழால் அழைக்கப்பட வேண்டும் என புனிதமிக்கப் பேரவையில், புரட்சித் தலைவியின் குரல், உரிமை முழக்கமாய், தீர்மானமாய், சரித்திரம் படைத்திருக்கிற சாதனைத் தலைவியாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் மலரடியை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்கள் நிறைந்த தொகுதி. கடலூர் மாவட்டத்திலேயே அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி இல்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று மாவட்டத்திற்கு ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி என்ற வகையில் விருத்தாசலத்தில் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

கூறியதுபோல, விருத்தாசலம் தொகுதிக்குட்பட்ட கடலூர் மாவட்டத்திலே அரசு தொழில்நுட்பக் கல்லூரியானது ஏதும் தற்போது இல்லை. அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும், அரசு இணைவு பெற்ற பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும், உணவு மேலாண்மைக் கல்லூரி ஒன்றும், சுயநிதிக் கல்லூரிகள் 16 என மொத்தம் 19 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.

திரு. V.T. கலைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளும் தமிழ் மக்களுக்கு நன்மைகளை மட்டுமே செய்கின்ற நற்றமிழ் அன்னை மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலேயே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி விருத்தாசலத்தில் அமைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்வார்களா எனத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

2016 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 5 ஆண்டு காலம் உளுந்தூர்பேட்டை தொகுதிக்கு, 25 ஆண்டு காலமாக செய்ய முடியாத சாதனைகளையெல்லாம் செய்து, அங்கிருக்கின்ற வழக்கறிஞர்களெல்லாம் வைத்த கோரிக்கையை ஏற்று, 13½ கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று மக்கள் பணியை சிறப்பாக செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, உளுந்தூர்பேட்டை தொகுதியிலேயிருக்கின்ற வழக்கறிஞர்களெல்லாம் 25 ஆண்டு காலமாக கோரிக்கை வைத்ததை ஏற்று, உளுந்தூர்பேட்டையிலே ஒருங்கிணைந்த சார்பு நீதிமன்றம் வழங்கப்படும் என்று அறிவித்து, அதற்கு ஒன்றரை கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்த எங்கள் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும், வழக்கறிஞர்கள் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதி விழுப்புரம் மாவட்டத்திலேயே பெரிய தொகுதியாக, அதிக வாக்காளர்களைக் கொண்ட தொகுதியாக உள்ளது. 121 ஊராட்சிகள், ஒரு பேரூராட்சியை உள்ளடக்கிய தொகுதி. விவசாயத்தை நம்பி வாழும் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த, ஏழை மாணவ, மாணவிகள் அதிகமாக இருக்கின்றார்கள். கல்வியிலே பின்தங்கிய தொகுதியாக இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள், கடந்த வாரம் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் விதி 110-ன்கீழ் 19 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்ததிலே, உளுந்தூர்பேட்டை தொகுதியில் 2 பள்ளிகளைத் தரமுயர்த்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, உயர் கல்வித் துறையின் சார்பிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உளுந்தூர்பேட்டைக்கு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்து, அந்தப் பகுதி மாணவர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, அவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு வழிவகை செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதேபோல, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த மாவட்டத்தில் படித்துக் கொண்டிருக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் கடந்த 2011-2016 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றைத் தொடங்கியிருக்கிறார்கள். அதேபோல, அரசின் சார்பிலே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, ஒன்றை சங்கராபுரத்திலே தொடங்கியிருக்கிறார்கள். ஆக, அவர் சார்ந்திருக்கக்கூடிய அந்த மாவட்டத்திற்கு என்ன தேவை என்பதைக் கருத்தில் கொண்டு இரண்டு கல்லூரிகளை புதிதாகத் தொடங்கிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாணவர்களுடைய சேர்க்கை கூடுதலாகி அந்தப் பகுதிக்குக் கூடுதல் கல்லூரி தேவைப்படுகின்ற நேரத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு, அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*